1994 ஏப்ரல் 27]

406—

மைய அரசின் கயிறு வாரியத்திலிருந்து தமிழக அரசுக்கு நிதி ஒதுக்கீடு செய்தல்.

16176—திரு. ஆர். சிங்காரம்:*

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மைய அரசின் கீழ் உள்ள கயிறு வாரியத்திலிருந்து (Coir Board) மாதிரிக் கயிறு கிராமத் திட்டத்திற்காக தமிழக அரசுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை செலவழிக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழக அரசுக்கு ஒதுக்கப்பட்ட தொகை முழுவதும் செலவழிக்கப்பட்டுவிட்டது.

(ஆ) கொல்லங்கோடு, கடலூர், நல்லூர், சிங்கம்புணரி, தென்காசி, தாமரைக்குளம் மற்றும் வீரிருப்பு ஆகிய மாதிரி கிராமங்களுக்கு கயிறு வாரியம் அளித்த தொகை முழுவதும் செலவழிக்கப்பட்டு விட்டது. மேலும் நாவாலை, பானாபுரம் ஆகிய கிராமங்களுக்கு கட்டுமானப் பணியின் மதிப்பு அதிகரித்துள்ளதால் கூடுதல் நிதி கயிறு வாரியத்திலிருந்து கோரப்பட்டுள்ளது.

திரு. ஓ. எஸ். அமர்நாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் கீழ் உள்ள கயிறு வாரியத்திடமிருந்து, மாதிரிக் கயிறு கிராமத் திட்டத்திற்காக, தமிழக அரசுக்கு ஒதுக்கப்பட்ட நிதியெல்லாம், அந்தக் கயிறு வாரியத்திற்கே செலவழிக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மதுரை மாவட்டத்தில் இருக்கிற பனையூர், சாமநத்தம் போன்ற பகுதிகளிலே கயிறு பின்னும் தொழில் மிகப் பிரபலமாக இருக்கிறது. வருங்காலத்திலே, மத்திய அரசு, கயிறு கிராமத் திட்டத்திற்காக அளிக்கிற அந்த நிதி, மதுரை மாவட்டத்திலுள்ள பனையூர், சாமநத்தம் போன்ற கிராமங்களுக்கும் வழங்கப்படுமா; எவ்வளவு நிதி அந்தந்தக் கிராமக் கயிறு திட்டத்தின் கீழ் செலவழிக்கப்பட்டது; தற்போது கொடுக்கிற நிதியுதவியைக் கூடுதலாக, தமிழக அரசு, மத்திய

அரசிடமிருந்து வாங்குவதற்கு ஏதேனும் பரிந்துரை செய்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் ஏற்கனவே சொன்னேன். கட்டுமானப் பணியின் மதிப்பு அதிகரித்துள்ளதால், கூடுதல் நிதியை கயிறு வாரியத்திடமிருந்து தமிழக அரசு கோரியிருக்கிறது. இன்னும் அந்த நிதி நமக்குக் கிடைக்கவில்லை. மற்றும், ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திற்கும், சுமார் 3 லட்சம் ரூபாய் செலவில், அங்கத்தினர்களுக்கு வீடு கட்டுகிற திட்டம், சமுதாயக் கூடம் கட்டுகிற திட்டம், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வாங்குவது, சேமிப்புக் கிடங்கு கட்டுவது, நவீனக் கழிப்பறை போன்ற திட்டங்களுக்கு, ஒவ்வொரு சொசைட்டிக்கும் சுமார் 3 லட்சம் ரூபாய் செலவிடப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், கயிறு தொழில் முக்கியமான ஒரு தொழிலாக இருக்கிறது. குறிப்பாக, பெண்கள் இதில் அதிகமாக ஈடுபட்டுள்ளார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொல்லங்கோடு, தாமரைக்குளம் ஆகிய இரண்டு இடங்களை மாதிரி கிராம காயர் திட்டத்திற்குச் சேர்த்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதுபோல கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள இன்னும் பல கிராமங்களை மாதிரி காயர் கிராமத் திட்டத்தில் சேர்த்து பயனடைய அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றித் தனியாகக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துக் கொடுக்க இயலும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 407, திருமதி கவிநிலவு தர்மராஜ், இருக்கையில் இல்லை.

வினா எண் 408, திரு. என். ஆர். ராஜேந்திரன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.